25

ழந்தைகளின் வாரப் பத்திரிகை

அணில்

மலர் 5
இதழ் 2
ஏப்ரல் 14
1950

வெள்ளிதோறும் ★ ஆசிரியர் : வை. கோவிந்தன் ★ அணு ஒன்று

13 JUN

பரிசு கிடைத்தது

டென்மார்க்கில் 12 வயது பையன் ஒருவன் படகு கவிழ்ந்து தண்ணீரில் மூழ்க இருந்த அப்பனையும் மகனையும் காப்பாற்றினன். தங்களைக் காப்பாற்றியதற்காக பையனுக்கு ஒரு ஷில்லிங் (பத்தணு) கொடுத்தார்கள்.

சாப்பாடுச் செய்தி

ஜப்பானில் இருக்கும் 100 வயதான எட்டுப் பேர்களை 'நீங்கள் இத்தனை வருஷம் எப்படி இருக்க முடிந்தது' என்று ரகசியமாகக் கேட்டார்கள். 'குறைவாகச் சாப்பிடுங்கள்' என்று பதில் சொன்னர்கள் அந்த நூறு வயதான எட்டுப்பேர்களும்.

நல்ல மாணவன்

ஒரு சிறு பள்ளிக்கூடம். அங்கு மற்ற பையன்களுடன் ஒரு நாள் புதியவன் வந்தான். புதியவன்தான் ஒரு நாய். அந்த நாய் பழுப்பு கலந்த வெள்ளை நிரமாக இருந்தது. பள்ளியில் இருந்த மாணவர்கள் அதைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தனர். நாயும் பையன்களுடனே நாற்காலியில் உட்கார்ந்தது.

நான்கு வருஷங்களாக தினம் அந்த நாய் பள்ளிக்கு வருகிறது. மாணவர்கள் போகும்பொழுது அதுவும் போய் விடுகிறது.

இந்தப் பழக்கம் எப்படி வந்தது? அந்த நாயின் சொந்தக்காரரின் பேத்திகளுடன் ஒருநாள் பள்ளிக்கூடத்திற்கு வந்தது. விரட்டினர்கள். போகவில்லை. பள்ளிப் பையன்களுக்கு அதனிடம் அபாரமான பிரியம். ஆதலால் அது தொந்திரவு செய்யாத வரையில் தினம் வந்து போகட்டும் என்று மறுபடி அதை விரட்டவில்லை. டவுன்காஸ்டர் அருகில் பெண்ட்லி என்னும் ஊரில் உள்ள சிறு பள்ளியில்தான் இந்தக் காட்சி நடைபெறுகிறது.

இந்தப் பெண் யார் ?

இவள் பலே கெட்டிக்காரி. பள்ளிக்கூடத்திலே இவள்தான் எல்லாவற்றிலும் முதல் பரிசு பெற்றவள். இவளைப் பற்றி அடுத்த இதழில் பாருங்கள். இவள் யார் என்பதை அறிவீர்கள்.

இலவசப் போட்டி : பக்கம் 3

அணில்

1950ஆ ஏப்ரல்மீ 14உ வெள்ளிக்கிழமை

தங்கைகளே! தம்பிகளே!!

மறுபடியும் அணில் வாரப் பத்திரிகையாக வெளி வந்ததை வாழ்த்தி நீங்கள் எழுதியிருக்கிறீர்கள்; நானும் 'நீங்கள் நீடூழி வாழ்க' என்று வாழ்த்துகிறேன்.

இந்த இதழிலே ஒருபோட்டி வருகிறது, கலந்து கொள்ளுங்கள். அணில் கூப்பனில்தான் விடை எழுத வேண்டும்.

புலிக்குட்டிவீரன் வெளி வந்துவிட்டது. அபாரமான கதை. எடுத்தால் படிக்காமல் வைக்கமாட்டீர்கள். நீங்கள் படிக்கும் பொழுது யாராவது உங்களுடன் பேச வந்தால் 'சள்புள்' என்று விழுவீர்கள். அவ்வளவு அபாரமான கதை. விலை ஓரணாதான். பதினாறு பேர் சேருங்கள். ஒரு ரூபாய் அனுப்புங்கள். பதினாறு புத்தகங்கள் உங்களுக்குக் கிடைக்கும், தனியாகத் தருவிக்க ஆசைப் படுபவர்கள் தபால் செலவு ஒரு அணா புத்தகவிலை ஒரு அணா ஆக இரண்டணா தபால் தலை அனுப்ப வேணடிவரும்.

அணில் அங்கத்தினர், பெயர் அணிலில் வெளிவரும்.

சரி, புது வருஷம் பிறந்து விட்டது. இந்த வருஷமாவது எனக்கும் உங்களுக்கும் நல்ல சோறு கிடைக்கச் செய்ய வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

●

நான் பேசுகிறேன்

இந்த வருஷ காங்கிரஸ் மகா சபைக்கூட்டம் பங்களூரில் கூடப் போகிறது. தேதி இன்னும் குறிக்கப்படவில்லை. இருந்தாலும் ஜூலை முதல் வாரத்தில் கூட்டுவதென பொதுப்படையாகத் தீர்மானம் செய்திருக்கின்றனர். திருவாங்கூர் கொச்சி யூனியன் தாலூக்காக்களில் ஒன்றான செங்கோட்டைத் தாலூகாவில் தண்ணீர் பஞ்சம் வந்துவிட்டது. சென்ற பல தினங்களாக செங்கோட்டைக்கு வரும் ஜனங்கள் தண்ணீர் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். செங்கோட்டை வாசிகளில் சில குடும்பத்தார் வேறு ஊர்களுக்குப் புறப்பட்டு விட்டனர், சென்ற வருஷம் மே மாதத்தில் 16,500 கள்ளமார்க்கட் வழக்குகள் நடந்தன. இத்தனை வழக்குகளுக்கும் 13,400 பேர்கள் தண்டனை விதிக்கப்பட்டனர். 4 லட்ச ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டது. 8 லட்சத்து 14 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள சரக்குகள் கைப்பற்றப்பட்டன. வெளிநாடுகளுக்கு ஹிந்தியில் தந்தி கொடுக்கலாம். ரோமன் எழுத்தில் தான் தந்தி இருக்க வேண்டும். பாகிஸ்தான் பிரதம மந்திரி புது டெல்லிக்கு வந்தார். நமது பிரதம மந்திரி நேருஜியுடன் கலந்து பேசினார். இருவரும் பாகிஸ்தானுக்கும் — இந்தியாவுக்கும் உள்ள சில தகராறுகள் சம்மந்தமாக ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

●

இவர்தானுங்க!

முதலாளி: (வேலைக்காரனைப் பார்த்து) டே, முனியா நீ நேற்று பல் வைத்தியரிடம் போக வேண்டுமென்று சொன்னாயே? உன்னை புட்பால் மாச்சில் பார்த்தேனே?

முனியன்: இல்லெங்க. கோல் கீப்பர் தானுங்க பல் வைத்தியர்.

●

உங்களுக்கு தெரியுமா?

பிரான்ஸில் ரோதர்டாமில் ஒரு பழைய கெடிகாரம் இருக்கிறது. அது 567-வருஷங்களுக்கு முன்னால் செய்தது. இன்னும் அந்தக் கடிகாரம் பழுதில்லாமல் சரியாய் ஓடிக் கொண்டிருக்கிறது.

உலகில் மொத்தம் 3,424 பாஷைகள் இருப்பதாய் சமீபத்தில் கணக்கெடுத்திருக்கிறார்கள். ஆசிய நாடுகளில் மட்டும் சுமார் 222 மொழிகள் பேசப்படுகின்றன. 18-ஆம் நூற்றாண்டில் இத்தாலியில் கார்டினல் மெசா போந்தி என்ற பாதிரி ஒருவர் இருந்தார். அவருக்கு 114 பாஷைகள் தெரியுமாம்.

அசோகச் சக்ரவர்த்தி இந்தியாவை ஆண்ட காலத்தில், நமது நாட்டின் பொது மொழி, பாலி பாஷை. அது தான் ராஜாங்க மொழியாகவும் இருந்தது.

தென்னிந்தியாவில் தரங்கம்பாடி என்னும் கடற்கரைப் பட்டணம் ஒன்று உள்ளது. இங்கே ஒரு காலத்தில் ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் அதிகம். இவ்வூர் திருவாங்கூர் ராஜாவுக்குச் சொந்தமாய் இருந்தது. இவ்வரசர், இதை 1621-ல் டேனிஷ் அரசாங்கத்துக்குக் கொடுத்து விட்டார்.

ரொமான் ரோலாங் என்பவர், பிரஞ்சுக்காரர். பேராசிரியர். மகாத்மா காந்திஜியின் நண்பர். இவர் எழுதிய புத்தகங்களில் உலகப் புகழ்பெற்றது, "ஜீன் கிரிஸ்டோபி" என்ற நாவல். இந்த நூல் வெளிவந்ததும், அதன் முதல் பிரதியை, வங்க விஞ்ஞானி ஜெகதீஸ்சந்திர போஸ் அவர்களுக்கு அன்பளிப்பாய் அனுப்பினார். அதில் "புது உலகத்தை விளக்கிய மேதை" என்று எழுதி அனுப்பினார்.

உலகிலேயே பிரிட்டனில்தான் வியாபாரக் கப்பல்கள் அதிகம். சென்ற யுத்தத்தின் போது உடைந்து போன கப்பல்களுக்குப் பதில், புதுக்கப்பல்களைக் கட்டி விட்டார்கள். அமெரிக்காவில் 1½ கோடி — டன் நிறையுள்ள, வியாபாரக் கப்பல்களே இருக்கின்றன. ஆனால் இங்கிலாந்திலோ, 2½ கோடி நிறையுள்ள வியாபாரக் கப்பல்கள் இருக்கின்றன.

●

எழுத்தறிவு இலவசப் பரிசு போட்டி-4

பரிசு ரூ. 25.

போட்டி முடிவு : 30-4-50.

விடைக் குறிப்பு :

விடைகளை இதே கூப்பனில்தான் எழுதி அனுப்ப வேண்டும். கவரில் "எழுத்தறிவுப் பரிசுப் போட்டி நெ. 4" என்று குறிப்பிட்டு "அணில், சக்தி காரியாலயம், ராயப்பேட்டை, சென்னை—14" என்று விலாசம் எழுதி அனுப்புக. விடைகளை எழுதி 30-4-50-க்குள் இங்கு கிடைக்கும்படி அனுப்பிவிட வேண்டும்.

பரிசுக் கூபன்

1	மா			
2	மா			
3	மா			
4	மா			
5	மா			

பெயர் ....

ஊர், தபாலாபீஸ். ....

....

ஜில்லா..............................

இடமிருந்து வலம்

1. இந்தச் சொல் ஜனங்களைக் குறிக்கும்
2. மாதங்களில் ஒன்று
3. நேரத்தைக் குறிக்கும் சொல்
4. நிலப் பிரதேசப் பகுதி
5. கனி வகைகளில் ஒன்று.

நீதிக்கதைகள்

காற்றும் சூரியனும்

காற்றுக்கும் சூரியனுக்கும், ஒரு முறை சச்சரவு நேர்ந்தது. காற்று நானே பலவான், பெரியவன், என்றது. சூரியன், 'நான்தான் பெரியவன், என்னை யாராலும் ஜயிக்க முடியாது என்றது. இரண்டும் தங்களுடைய திறமையைப் பரீக்ஷித்துக் காட்ட நினைத்தன.

ஒருநாள், வழிப்போக்கன் ஒருவன் வீதி வழியே போய்க்கொண்டிருந்தான். சூறுவளிக்காற்று, விசையாய் அவன்மேல் வீசியடித்தது. இடை விடாமல் சுழற்றிச் சுழற்றி அடித்தது. காற்றின் உக்கிரத்தில், வழிப்போக்கனின் சட்டை வேட்டிகள் எல்லாம் கிழிந்து விட்டன. கிழிந்ததும், அவன் தன் சட்டை வேட்டிகளைக் காற்றில் பறந்தோட விடவில்லை. கைகளால் இறுகக்கட்டி, அவற்றைப் பிடித்துக்கொண்டான்.

காற்று, முடி தமட்டும், வேகத்தைக் காட்டியது. அவன் துணிகளை, இம்மிகூட அசைத்துப் பறிக்க முடியவில்லை.

இதைப்பார்த்தது சூரியன். தன் பலத்தை அவனிடம் கொஞ்சம் கொஞ்சமாகக் காட்டத் தொடங்கியது. முதலில் லேசாக, தன் உஷ்ணம் மிகுந்த இளம் கிரணங்களைச் சாந்தமாக அவன்மீது வீசியது. வெப்பம் லேசாய் இருந்தும் வழிப்போக்கனல் அந்தச் சூட்டைக்கூடத் தாங்க முடியவில்லை. மயங்கினன். களைத்தான். காற்றுக்காகப் பயந்து கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருந்த துணிகளை அவிழ்த்தான், உதறினன். தலைமேல் போட்டுக் கொண்டான், வியர்வையைத் துடைத்துக் கொண்டான். வெப்பம் உடம்பெல்லாம் தகித்தது. எரிச்சல் எடுத்தது. பக்கத்தில் இருந்தது, ஒரு மரத்தின் நிழல். அங்கே ஓடினன். அந்த நிழலில் தங்கினன். வெய்யில் தணியும்வரை, வழிப்போக்கன் மரத்தின் நிழலைவிட்டு அகலவில்லை. பந்தயத்தில் பலமிழந்து, காற்று தோற்றது. சூரியனே ஜயித்தது.

உக்கிரத்தைக் கட்டிலும் சாந்தமே முடிவில் வெற்றியளிக்கிறது.

—ஈசாப்

விசை பொம்மைகள்

இந்த பொம்மைகளை ஜப்பானியத் தம்பி தங்கைகள், இந்திய தம்பி தங்கைகளுக்காக ஜப்பானில் இருக்கும் இந்திய மந்திரி ஸ்ரீ செட்டூரிடம் கொடுத்தார்கள். உங்கள் சார்பாக ஜப்பானியக் குழந்தைகளுக்கு நேருஜி 'இந்திரா' அனுப்பித்தது ஞாபகம் இருக்கிறதா?

காவேரி — ஒரு அனாதையா?

★

['இவர்கள் யார்?' என்ற படத்தை போனவார 'அணில்' அட்டைப் படத்தில் பார்த்தீர்கள். இவர்களைப் பற்றித்தான் இந்தக் கதை சொல்லுகிறது. இவர்கள் மூவரும் பர்மாவிலிருந்து கால் நடையாக இந்தியாவுக்கு வருகிறார்கள். வழியிலே பல பல கஷ்டங்கள். மூன்று பேர்களும் ஊருக்கு வந்து சேர்ந்தார்களா? அடுத்த அணிலே பாருங்கள். எல்லாம் விபரமாகத் தெரியும்.]

★

வந்துவிட்டது அபாயம். அபாயச் சங்கு ஊழையிட ஆரம்பித்தது. மக்களெல்லாம் மனம் பதறி அப்படி அப்படியே செய்து கொண்டிருந்த வேலைகளை விட்டு விட்டு ஓடினார்கள். டிரெஞ்சிலே நுழைந்தார்கள்.

டப் டப் டபார், பட் பட் படார், டும் டும் டுமீல் என்று குண்டுகள் வெடிக்கின்றன. ஜப்பான்காரன் போட்ட குண்டுகள் தான். ஆகாயக்கப்பல்கள ஐம்பது அறுபது பறக்கின்றன. பறந்து கொண்டே தள்ளுகிறார்கள் குண்டுகளை.

எங்கே என்று அறிய ஆசைப் படுகிறீர்களா? அவசரப்படுகிறீர்களா? 1941 ஆம் கடைசியிலே பர்மாவின் தலைநகரான ரெங்கூன் பட்டணத்தில் தான். குண்டுகள் வீசி முடிந்தன. வந்தவர்கள் வந்த வழி [illegible]ர்கள்.

மறுபடியும் அபாய அறிவிப்புச் சங்கு 'அபாயம் இல்லை' என்று ஊழையிட்டது. 'டிரெஞ்சில்' அரைமணி நேரமாக அவதிப்பட்டுக் கொண்டிருந்த அத்தனை பேர்களும் வெளியே வந்தார்கள். பார்த்தார்கள். எங்கு பார்த்தாலும் நெருப்பு எரிகிறது. பெரிய பெரிய மாட மாளிகைகளெல்லாம் தரைமட்டமாகி விட்டன. தெருவிலே ஏராளமான பிணங்கள். சிலர் அரை உயிரோடு தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

இத்தனை அலங்கோலங்களையும் டிரெஞ்சிலிருந்து வெளியே வந்த, சீதாலட்சுமி அம்மாள் பார்த்தாள். ஓவென்று அலறினாள். உடனே புருஷன் அர்த்தநாரி அய்யரிடம் 'நாம் நம் தேசத்துக்குப் போய் விடுவோம். நமக்கோ ஒரே ஒரு பெண். அவளும் பாட்டியைப் பார்க்க வேணும், மாமாவைப் பார்க்க வேணும் என்று அடிக்கடி சொல்லுகிறாள். இந்த அபாயங்களில் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பித்து விடுவோம்' என்றாள்.

அர்த்தநாரி அய்யர் ரெங்கூன் அக்கௌண்டெண்ட் ஜெனரல் ஆபீஸில் உதவி அக்கௌண்டெட் ஜெனரலாக இருக்கிறார். அவருக்கு ஒரே ஒரு பெண். அவள் பெயர் காவேரி. அவளுக்கு ஆறு வயது இருக்கும். ரெங்கூனிலே இரண்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கிறாள்.

அர்த்தநாரி அய்யர் தன் மனைவியிடம் 'நான் சர்க்கார் உத்தியோகத்திலிருக்கிறேன். நான் எப்படி நம் தேசத்துக்கு வர முடியும்? இந்த அபாயங்களைப் பார்க்கும் பொழுது எனக்கும் பயமாகத்தான் இருக்கிறது. என்ன செய்கிறதென்றே புரியவில்லையே' என்றார். காவேரியும் 'அப்பா, ஊருக்குப் போய்விடுவோம் அப்பா. பாட்டி, மாமா இவர்களை எல்லாம் பார்க்கவேண்டும். ஊருக்குப்போய்விடுவோம் அப்பா, என்று கண்களைத் கேய்த்தாள்.

கதை செல்லியது
மங்களம்

அதற்குள்ளே சீதாலட்சுமி அம்மாள், 'நீங்கள் எங்களைக் கூட்டி போய் விட்டு வருவதாகச் சொல்லி லீவ் கேளுங்களேன். நிச்சயமாகக் கிடைக்கும்' என்றாள்.

'சரி அதுவும் ஒரு நல்லயோசனை தான். அப்படியே செய்கிறேன்' என்றார். அன்று தினமே மேலதிகாரிக்கு 'லீவ்' லெட்டர் எழுதினார்.

பதில் வரவில்லை.

மறுபடியும் பலமுறை ஜப்பான் பிளேன்கள் வந்து மட மட வென்று குண்டுகளைத் தள்ளுகிறார்கள். பட்டணமே நாசமடைகிறது. பட்டணத்திலுள்ள மக்கள்-அந்நிய நாட்டார் அனைவரும் மூட்டை முடிச்சுகளுடன் கப்பலேறி விட்டார்கள். ஏதோ குறைவான பேர்கள் தான் பட்டணத்திலிருக்கிறார்கள். அத்தனைபேரும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள்

ஒருநாள். அன்றுதினம் காலையில் சென்னைக்குப் புறப்படும் கடைசிக் கப்பலும் புறப்பட்டு விட்டது.

அன்றுதினம் அர்த்தநாரி அய்யருக்கு 'லீவ்' கிடைத்தது. கப்பல் தான் புறப்பட்டு விட்டதே, என்ன செய்வது? சீதாலெட்சுமி அம்மாள் புருஷனிடம் 'நாம் மற்றவர்களைப் போல நடந்தே இந்தியாவுக்குப் போய் விடலாம். எனக்கு இங்கு குழந்தையை வைத்துக் கொண்டு இருக்க பயமாக இருக்கிறது. பட்டணத்தில் எங்கு பார்த்தாலும் கொள்ளையும் கொலையுமாக இருக்கிறது. எப்படியும் ஊரை விட்டுப் புறப்பட வேண்டியதுதான் என்றாள்.

பயணத்திற்குத் தயாராகி விட்டார்கள். வழிப் பயணத்துக்கு காவேரிக்காக முறுக்கு முதலிய பலகாரங்கள் செய்தார்கள். எல்லாம தயாராகி விட்டன. 'பூம் பூம்' என்று ஊதிக்கொண்டு கார் வந்து விட்டது வாசலில். காரிலே ஏறினார்கள். அப்பா, அம்மா, மகள் மூவரும். ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தார்கள். ரயிலிலோ ஒரே கூட்டம். இருந்தாலும் என்ன? காவேரி, சீதாலட்சுமி அம்மாள், அர்த்தநாரி அய்யர் மூவரும் ரயிலேறி விட்டார்கள். 'டங், டங்; என்று மணியடித்தது. 'ஊ' என்று ஊளையிட்டுக்கொண்டு ரயிலும் புறப்பட்டது. நான்கு நாட்கள் பிரயாணம் செய்தார்கள். மாந்தலே வந்து சேர்ந்தார்கள். மாந்தலேயிலிருந்து 'ஏ' என்ற ஊருக்கு வேறு ரெயிலில் ஏறினார்கள். அடுத்த நாள் 'ஏ'க்கு ரயில் வந்தது. ரயிலை விட்டு இறங்கினார்கள். ஏயில் கிடைத்த உணவுப்பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்கினார்கள். ஏயிலிருந்து படகு மூலமாகவும், கால் நடையிலும், பஸ்ஸிலும் கலையுவா என்ற ஊருக்கு வரலாம். அர்த்தநாரி அய்யரிடம் ரூபாய் வசதியாக இருக்குமல்லவா? ஆதலால் அவர் பஸ் மூலமாகப் போவது என தீர்மானித்தார். அர்த்தநாரி அய்யர் குடும்பம் பஸ்ஸில் ஏறிவிட்டார்கள். பஸ்ஸில் மூட்டைமாதிரி மக்களை அடைத்தார்கள். புளி மூட்டை மாதிரியானால் என்ன? மண் மூட்டையானால் என்ன? பிறந்த பொன்னாட்டை அடைய வேண்டுமல்லவா? பஸ்ஸும் புறப்பட்டது. பாதையோ பாடாவதி. 8 வது நாள் கலையுவாவைக் கண்டது பஸ். பாசஞ்சர்கள் பஸ்ஸைவிட்டு இறங்கினார்கள். அங்கிருந்து புறப்பட்டார்கள். இனி பஸ், வண்டி எந்த விதமான வசதியும் கிடையாது. நடக்கவேண்டும். கலையுவாவிலிருந்து கலேமியோ வழியாக தம்முவுக்கு 88 மைல்கள். 88 மைலும் மலைதான். மலையடி வாரத்தில் தான் நடக்கவேண்டும். உயரமான மலை. அடிவாரத்தில் ஒரு சிறு பாதை. பாதை அடியில் 400—500 அடி பள்ளத்தாக்கு, பாதையிலே கால் இடறினால் நேரே பள்ளத் தாக்கில் உருண்டு விழவேண்டியதுதான். எலும்பு கூடப் பார்க்க முடியாது. எல்லோரும் அந்த வழியே தம்முவுக்குப் புறப்பட்டார்கள். அர்த்தநாரி அய்யர், சீதாலெட்சுமி அம்மாள், காவேரியும் அவர்களுடன் நடக்கிறாள் வழியிலே தண்ணீர் கிடையாது.

(தொடரும்)

பால் பெரிதான கதை

அம்மா சமையல் அறையில் பால் காய்ச்சிக் கொண்டிருந்தாள். அப்பொழுது மகன் சுகுமாரைக் கூப்பிட்டாள். 'சுகு பாலைப் பார்த்துக்கோ. மாடிக்குப் போய் வரேன், என்று சொன்னாள். சுகு அடுப்பில் சூடாகும் பாலைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். அம்மா மாடிக்குப் போய்விட்டாள்.

பால் கொதித்துக்கொண்டிருக்கிறது. திடீரென 'அம்மா பால் சட்டியைக் காட்டிலும் பால் பெரிதாகிவிட்டதம்மா, என்று கத்தினான் சுகு.

விநோதம்

படகிலே கண்ட தங்கம்!

முப்பது லட்ச ரூபாய் பெறுமானமுள்ள தங்கம் கண்டு பிடிக்கப்பட்டது. பூமியிலா கண்டு பிடித்தார்கள்? இல்லை. கடலிலா கண்டு பிடித்தார்கள்? சமுத்திரத்திலே தங்கம் இருக்கிறதா? இல்லை. படகிலே கண்டு பிடித்தார்கள். படகிலே தங்கம் விளைகிறதா? ஆம். அராபிக்காரர் விளைய வைத்தார்கள். பேரீச்சம்பழத்திலே தங்கம் விளைய வைத்தார்கள்.

ஏப்ரல் மாதம் 1வ ஒரு படகு பம்பாய்க்கு வந்தது. பாரசீக வளைகுடாவிலிருந்து வந்த படகுதான் அது. அந்தப் படகு 100 டன் கனம் உடையது. அந்தப் படகிலே பேரீச்சம்பழம் ஏற்றி வந்தார்கள். கரைக்கு நேரே வந்தார்களா? நடுக் கடலில் நங்கூரம் பாய்ச்சி இருந்த படகை பம்பாய் சுங்க இலாகா அதிகாரிகள் பரிசோதனை செய்தார்கள். பேரீச்சம் பழக் கூடைகளில் எண்பதினாயிரம் பெறுமானமுள்ள தங்கம் கண்டுபிடித்தார்கள். தோண்டத் தோண்ட சுரங்கத்தில் தங்கம் கிடைக்குமல்லவா? சுங்க அதிகாரிகள் அந்தப் படகிற்குக் காவல் போட்டார்கள். பிறகு ஏப்ரல் 4வயன்று சுங்க அதிகாரிகள் 20 பேர்கள் சுங்க கலெக்டர் எம். இ. ரஹ்மானுடன் படகுக்குப் போனார்கள். அவர்களுடன் சுத்திகள், வாள்கள், உளிகள். பூதக் கண்ணாடிகளும் போயின. இவைகளின் உதவியால் படகைச் சோதனை இட்டனர் சுங்க அதிகாரிகள். ஐந்து மணி நேரம் மும்முரமாகச் சோதனை செய்ததில் 29 லட்ச ரூபாய் பெறுமானம் உள்ள 787 பவுண்டு தங்கம் கண்டு பிடித்தார்கள். அதிகாரிகள் கண்டுபிடிக்கு முன் களைத்து விட்டார்கள். கண்டுபிடித்ததும் மகிழ்வு அடைந்தனர். இவ்வளவுதானா? படகையே உடைக்கப் போகிறார்கள். அதற்குள்ளும் தங்கம் விளையலாம் அல்லவா?

1878-ம் வருஷத்திற்குப் பிறகு கடல் சுங்க இலாகாவிலே இவ்வளவு பெறுமானமுள்ள வஸ்து கைப்பற்றப் பட்டதில்லையாம்.

நாய்களுக்கு பள்ளிக்கூடம்

ஷெப்பீல்டில் நாய்களுக்கு பாதை விதிகள் கற்பிப்பதற்காக ஒரு பள்ளிக் கூடம் திறக்கப் போகிறார்கள்.

பசி! பசி!! பசி!!

காரன்வாலில் உள்ள பெர்ரானுதோ என்ற ஊர் கோவிலில் இருந்த பியானோ வாத்தியத்தின் 150 ரூபாய் பெறுமானமுள்ள சாமான்களை சுண்டெலி தின்று தீர்த்துவிட்டது,

கடலோடியின் கதை

அனில் அண்ணன்

(முன் இதழ் தொடர்ச்சி)

என்னுடைய கதையைக்கேட்டு முடிந்தது. அவர்கள் 'நீ தப்பித்தது ரொம்ப ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. அடேயப்பா அவன் பொல்லாத கிழவன். அவனை அத்தனை மாலுமிகளுக்கும் தெரியுமே. அவனை கடல் கிழவன் என்று சொல்லுவார்கள். அவனுடைய கால்களால் அவன் கொலை செய்யாமல் விட்டது நீ ஒருவன்தான். உன்னை அவனிடமிருந்து காப்பாற்றிய ஆண்டவன் திருநாமம் வாழ்க, என்று கத்தினர்.

என்னை கப்பலுக்கு அழைத்து போனார்கள். கப்பித்தானுக்கு அறிமுகப்படுத்தினார்கள். கப்பித்தானும் என்னை வரவேற்று எனக்கு ஆடை அணிகள் தந்தான். உடுத்திக் கொண்டேன். கப்பித்தானும் என்னுடைய கதையைக் கேட்டு என்னை வாழ்த்தினான். பிறகு கப்பல் புறப்பட்டது.

கப்பல் போய்க் கொண்டிருக்கிறது. பல பகல்களும், பல இரவுகளும் கப்பல் போய்க்கொண்டிருக்கிறது. ஒருநாள் ஒரு பெரிய பட்டணத்தின் கரையை அடைந்தது கப்பல். அந்த நகரத்திற்கு 'ஆஞ்சநேய பட்டணம்' என்று பெயர் வழங்கி வருகிறது. காரணம் தெரியுமா? அங்கே வாலில்லாக் குரங்குகள் மரங்களிலே வசித்தன.

அந்த நகரத்திலே ஏதாவது வேலை கிடைக்காதா என்று நானும், எனது வியாபார நண்பர் ஒருவரும் இறங்கினோம். கரையை விட்டு நகரத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறோம். போகும் வழியிலே எனது நண்பர் என்னிடம் ஒரு பையைத் தந்தார். தந்து 'இங்கு கிடக்கும் கூழாங் கற்களை பொறுக்கிப் பையிலே போட்டுக்கொள். கூட்டமாக நகரவாயிலைக் கடந்து விடுவார்கள். அவர்களுடனே நீயும் சேர்ந்து கொள். அவர்களுடனே போ. அவர்கள் செய்வதையே நீயும் செய். உனக்கு செலவுக்கு வேண்டிய பணம் கிடைக்கும்' என்று சொன்னர்.

அவர் சொன்னபடியே கூழாங் கற்களை பையிலே நிரப்பிக் கொண்டேன். நகரவாயிலை நோக்கிப் புறப்பட்டேன். கண்டேன் கூட்டத்தாரை. கூட்டத்தாருடன் சேர்ந்து கொண்டேன். எல்லோரும் என்னைப் போலவே ஒவ்வொரு பை வைத்திருந்தனர். அவர்களிடம் என் நண்பர் என்னைக் காண்பித்து 'இவர் ஒரு ஏழை. இவருக்கு சாப்பாட்டுக்குச் சம்பாதித்துக் கொள்ளக் கற்றுக் கொடுங்கள். உங்களை ஆண்டவன் காப்பாற்றுவார்' என்று சிபார்சு செய்தார்.

கொஞ்சதூரம் நடந்தோம். ஆழமான ஒரு மலையடிவாரத்தை அடைந்தோம். அங்கே மரச் சோலைகள் அழகழகாக இருந்தன. மரத்தின்கிளைகளில் கூட்டம் கூட்டமாக 'ஆஞ்சநேயர்கள்' தொத்திஇருந்தார்கள். அந்த மரத்திலே தடிப்பான தோலுடைய காய்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அந்தக் காய்க்குத்தான் தேங்காய் என்று பெயர்.

மரத்தடியிலேநின்றோம். என்னுடைய கூட்டாளிகள்பைகளைத் தரையிலே வைத்தார்கள். கூழாங் கற்களால் ஆஞ்சநேயர்களைக் குறி வைத்துஎறிந்தார்கள். நானும் அப்படியே செய்தேன். ஆஞ்சநேயர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. பதிலுக்கு

தொடர்கதை

எங்கள்பேரில்எறியவேண்டாமா? தேங்காய்களைப் பிடுங்கி எங்களைப் பார்த்து எறிந்தன. நாங்கள் தேங்காய்களைப் பொறுக்கி எங்கள் பையிலே போட்டுக் கொண்டோம். பை நிறைந்ததும் பையைத் தோளிலே போட்டுக் கொண்டு நகரத்தை நோக்கி நடந்தோம். நகரத்தை அடைந்தோம். நகரத்தை அடைந்ததும் நகரத்திலே தங்கியிருந்த என் நண்பர் என்னிடமிருந்த பையை வாங்கிக் கொண்டார். அதற்குப் பதிலாக எனக்கு சில வெள்ளிக் காசுகள்

தந்தார். தினமும் கூட்டத்தாரு டன் நகரத்திற்கு வெளியே போய் தேங்காய் கொண்டு வருவேன். விற்பேன். பணம் சம்பாதிப்பேன். பணமும் சேர்த்து விட்டேன் முத்துக்கடல் வரை போக, கப்பல் செலவுக்கு, புறப்பட்டேன். கப்பல் ஏறினேன. என்னுடன் தேங்காய் கொஞ்சம் கொண்டு வந்தேன். வழியிலுள்ள தீவுகளில் தேங்கா யைக் கொடுத்துப் பதிலுக்கு மிளகு, ஏலம் வாங்கினேன். வரும் வழியிலுள்ள மற்ற தீவுகளில் மிளகு, ஏலத்தை நல்ல விலேக்கு விற்றேன். கடைசியாக முத்துக் கடலுக்கு வந்து விட்டேன். அங்கு முத்துக் குளிப்பவர்களே வேலேக்கு அமர்த்தினேன்.

என்னுடைய அதிர்ஷ்டம் எப் பொழுதுமே என்னைக் கைவிட்ட தில்லே. ஒவ்வொரு தடவையும் முத்துக் குளிக்கும் போது நிறைய நிறைய முத்துக்கள் கிடைத்தன. சொந்த ஊருக்குப் போக வேண்டு மென்று ஆசை தூண்டியது. அந்த முத்துக் கடலில் கிடைத்த அரு மையான வாசனை மரக் கட்டை களே வாங்கினேன். நல்ல கப்பலா கப் பார்த்து பாஸ்ராவுக்குப் புறப் பட்டேன். கப்பல் பாஸ்ராவை அடைந்தது. பாஸ்ராவிலிருந்து பாக்தாதுக்குச் சுகமாக வந்து சேர்ந்தேன். நேரே என் வீட்டுக்கு வந்தேன் நண்பர்களும் சுற்றத் தார்களும் என்னே வரவேற்று வாழ்த்தினர்கள்.

எந்தக் காலத்தைக் காட்டிலும் இப்பொழுது என்னிடம் நிறையப் பொருள்கள் இருக்கிறதல்லவா? தேவைப்பட்டவர்களுக்கு அவை களே வாரி வழங்கினேன். நானும் சுகபோகத்துடன் வாழ்ந்தேன்.

நண்பர்களே என் கூடவே இப் பொழுது சாப்பிடுங்கள். நாளைக் காலேயில் என் ஆருவது பிரயாணத் தைக் கேட்பதற்காக அவசியம் வரவேண்டும். அதைக் கேட்டீர் களானல் இதுவரை நான் சொன்ன பிரயாணங்களே அது உங்களே மறக்கச் செய்யும்.

கடலோடி சின்பாது ஐந்தாவது பிரயாணக் கதை சொல்லி முடித் ததும், மூட்டைதூக்கிக்கு நூறு தங்க மோகராக்கள் கொடுத் தான். மூட்டை தூக்கி சாப்பிட் டான். சாப்பிட்டதும் மற்ற விருந் தாளிகளுடன் போய்விட்டான். மறுநாள் கடலோடி ஆருவது பிரயாணத்தைச் சொல்ல ஆரம் பித்தான்.

அடுத்த இதழில்
ஆருவது பிரயாணம்

பட்டம் பார்

திலகன்

ஆடி ஆடி ஏறுது
அசைந் தசைந்து ஏறுது.
வாடி கண்ணே மாடிமீது
வந்து பட்டம் பாரடீ!

மெல்ல மெல்ல ஏறுது
வேக மாக ஏறுது.
துள்ளி வரும் காகத்தைத்
துரத்திச் சண்டை போடுது!

குருவி போல வானிலே
குட்டிக் கரணம் போடுது.
மருவி வரும் காற்றில் சற்று
மயங்கி நின்று உறங்குது!

வெட்டி வெட்டி ஏறுது
மின்னல்போலத் துள்ளுது.
வட்ட மிட்டுக் கழுகு போல
வான மெங்கும் சுற்றுது.

வீசி வீசி ஏறுது
மேலே மேலே ஏறுது.
ஆசைக் கண்ணே ஓடிவந்து
அதிச யத்தைப் பாரடீ!

கையிலே பணம்

நியூயார்க் நகரத்தில் குப்பையிலே கிடந்து ஒரு கந்தை மூட்டையைக் கண்டெடுத்தான் போலீஸ்காரன். பிரித்துப் பார்த்தான். அதிலே மூவாயிரம் பவுன் மதிப்புள்ள டாலர் நோட்டுகள் இருந்தன.

திருடனும் திட்டனும்

ஒரு திருடன் ஒருவியாபாரியின் காரை உடைத்து அதில் இருந்த திருடர் அபாய அறிவிப்பு அலாரம் ஒன்பதை எடுத்துக்கொண்டு போய் விட்டான்.

பழிக்குப் பழி

முதலாளி: (தோட்டக்காரனிடம்) இரண்டு அடி ஆழத்தில் விதையை ஊன்றுவதில் பயனில்லே:

தோட்டக்காரன்: எனக்குத் தெரியும். பறவைகளுக்கு இது தொந்தரவாக இருக்குமல்லவா?

உங்கள் புத்தகம்

அணில் அண்ணன் சொல்லியது
முடியாது
புஷ்கோட்
ட்ரிங் ட்ரிங்
மூன்று கேள்விகள்

மஞ்சேரி ஈச்வரன் சொல்லிய
சந்திர வளையம்

லஷ்மி சொல்லிய
அதிர்ஷ்ட தேவதை

பாலசுப்பிரமணியன் சொல்லிய
மல்கோவா

'குகப்ரியை' சொல்லிய
கிளிக்கோயில்

திருமயம் நடராஜன் சொல்லிய
புலிக்குட்டிவீரன்

ஒவ்வொன்றும் ஒரணு

திருமயம் நடராஜன் சொல்லிய
சிலேயும் குருவியும்
விலே அணு எட்டு

தபால் செலவு தனி

சக்தி காரியாலயம்
சென்னே 14

ஜீனித் திருட்டு

மார்ஸ்டன் என்ற ஊரில் ஒரு திருடன் கடையிலிருந்த திராட்சை ரசம், சிகெரெட்டுகளைத் திருடாமல் 21 பவுண்டு ஜீனியை மட்டும் திருடிக் கொண்டு போய்விட்டான்.

கிருதா மீசைக்காரன்!

இங்கிலாந்தில் மெய்டன் ஹெட் என்ற ஊர் இருக்கிறது. அங்கே ஒரு போலீஸ்காரன் இருக்கிருன். அவன் பெயர் ஹம்பிரே லெஸ்டாக். அவனைக் கிருதா மீசைக்காரன் என்ருல் சிறு பிள்ளைகளுக்குக் கூடத் தெரியும். அவன் மீசை, ஒவ்வொரு பக்கத்திலும் ஆறு அங்குல நீளம் இருக்கிறது. அதைப் பளபள வென்று, எண்ணே தடவிச் சீவி திருகிவிட்டுக் கொண்டிருப்பான். ஆளேப் பார்த்தாலே பயமாயிருக்கும். அவன், ஆஸ்காட் என்னும் போலீஸ் சர்வகலாசாலே யில், படித்து, பி. ஏ. பட்டம் பெற்றிருக்கிருன்.

சர்க்கஸ் யானை

திருமயம் எஸ். நடராஜன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

குதிரைகள், சர்க்கஸ் வளையத்தில் சுற்றிச் சுற்றி ஓடிவந்து கண்ணு மூச்சி விளையாடின. குதிரைகளின் மேல் நாயும், குரங்கும் சவ்வாரி செய்கின்றன. புலி, பயங்கரமாய் வாயைத் திறக்கிறது. அதற்குள், ஒரு ஆட்டுக்குட்டி பயமில்லாமல் தலையை நீட்டி நீட்டி, வெளியே இழுக்கிறது. ஆட்டம் முடியும் போது, எல்லா மிருகங்களும் சேர்ந்து நின்று ஒரே தட்டில் தண்ணீர் குடிக்கின்றன. ஆட்டம் முடிந்தது. மறுநாள்.

சர்க்கஸ் மானேஜர் சாண்டோ சாமுவல், எல்லா மிருகங்களையும் பிரியமாய்த் தடவிக் கொடுக்கிறார். கோமதி, பார்வதி இரண்டு யானைகளும் சாண்டோவிடம் ரொம்பப் பிரியம். சாண்டோவும் அவைகளிடம் ரொம்ப உயிருக்கு உயிர்.

கோமதி புத்திசாலி. மகளுக்கு அடிக்கடி புத்திமதிகளைச் சொல்லி, திருத்தும். "இந்தாடி என் கண்ணே! நான் சொல்வதை கவனி. அடக்கமாய் இரு. அது தான் அழகு. செய்யச் சொல்லுகிற வேலையை, உடனே செய். தள்ளிப் போடாதே" என்றெல்லாம் சொல்லிக் கொடுக்கும். இதெல்லாம் பார்வதிக்குப் புரிவதில்லை. அது சின்னக் குழந்தையல்லவா? "ஆமா... அப்படிச் செய்கிறேன் அம்மா!" என்று தூங்கிக்கொண்டே சொல்லும். மண்ணில் புரளாதே என்றால், குடு குடு வென்று ஓடிப்போய், தரையில் உருளும். புழுதியில் புரளும்.

ஒரு நாள் பார்வதி, கதவில் மோதி, தலையில் பலமாய் இட்டுக் கொண்டது. பலமான அடி. அதனால் மயங்கிப்போய் கீழே விழுந்தது. மயக்கமாய்க் கிடந்தது. சாண்டோ சாமுவல் ராத்திரி ஆட்டத்துக்கு, அதை டெண்டுக்குள் ஓட்டிக்கொண்டு போனார். எலக்டிரிக் விளக்குகளைப் பார்த்ததும் அதற்கு மயக்கம் வந்தது. கீழே விழுந்தது. தாய் கோமதி மட்டும், விளையாட்டுகளைக் காட்டியது. பார்வதி படுத்தபடி, அம்மாவின் வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தது. இதுவும் ஒரு விளையாட்டுத் தான் என்று நினைத்து, அங்கே கூடியிருந்தவர்கள் கை கொட்டிச் சிரித்தார்கள்.



பார்வதிக்கோ உடம்பு குணமில்லை. இதை சாண்டோ தெரிந்து கொண்டார். ஒரு டாக்டரைக்கூட்டி வந்தார். டாக்டர் பார்த்தார். பரிசோதித்தார். காய்ச்சல் இருக்கிறதென்று, அதற்கு மருந்து கொடுத்தார்.

பிறகு, பார்வதி ஒரு மிருகக் காட்சிசாலைக்கு அனுப்பப்பட்டது. தலை அடிபட்டதிலிருந்து, அதன் ஞாபக சக்தி எல்லாம் குறைந்தது. தாயை மறந்தது. எஜமானை மறந்தது. விளையாட்டில் ஞாபகமில்லை. வேளா வேளைக்கு தீனி தின்பதைக்கூட மறந்தது. சாண்டோ அதைப் பார்த்துவர, போயிருந்தார். "பார்வதி, பார்வதி இந்தா பார்வதி! இந்தா தேங்காய்! என்னைத் தெரிகிறதா உனக்கு?" என்று முதுகில் தடவிக் கொடுத்தார். அவர் யாரென்றே அதற்கு ஞாபகமில்லை. "அடடா! என்ன அறிவுள்ள யானைக்குட்டி. பிள்ளையைப் போல் வளர்த்தேனே, என்னிடம் அப்பாவைப் போல் பிரியமாய் இருந்ததே! என்னைக்கூட நினைவில்லையே! இதற்கு இப்படி வியாதி வரலாமா?" என்று ரொம்ப வருத்தப்பட்டார்.

ஐந்தாறு மாதமானது. மிருகக் காட்சிசாலையில் ஐராவதம் என்று ஒரு தம்பி யானைக்குட்டி இருந்தது. அது அடிக்கடி பார்வதியுடன் வந்து பேசும். பார்வதிக்குப் பழம் பறித்துத் தரும். வெளியே கூட்டிக்கொண்டு செல்லும். இப்படி இருக்கும்போது, திடீரென்று பார்வதிக்கு மூளைத் தெளிவு உண்டானது. வியாதி குணமானது. ஐராவதத்துடன் ஜோராய் விளையாட ஆரம்பித்தது. ஓடியாடி விளையாடியது. கொஞ்ச காலம் கழித்ததும், சாண்டோ பார்வதியைப் பார்க்க வந்தார். எஜமானை யாரென்று புரிந்து கொண்டது. பழைய சர்க்கஸ் வித்தையெல்லாம் அதன் நினைவுக்கு வந்தது. சாண்டோவைக் குனிந்து வணங்கியது. தட்டிக் கொடுத்தார். ரொட்டி கொடுத்தார். ஆனந்தமாய் வாங்கித் தின்றது. "வருகிறாயா அம்மாவைப் பார்க்க" என்றார். "வருகிறேன்" என்பது போல், துதிக்கையைத் தூக்கி ஜாடை காட்டியது. அவருக்கு ரொம்ப சந்தோஷம்.

சாண்டோ, பார்வதியை சர்க்கசுக் கூட்டிக் கொண்டு போனார். அது, அம்மாவுடன் இன்பமாய் விளையாடியது.

ஆசிரியர் : வை. கோவிந்தன்

சென்னை–2, பாப்பா பிரசில் ஜெ. செல்லையாவால் அச்சிடப் பெற்று, வை. கோவிந்தனால் வெளியிடப்பெறுகிறது.

வருட சந்தா ரூ. மூன்று.
இரண்டு வருடங்களுக்கு ரூ. ஐந்து.

சக்தி காரியாலயம், சென்னை—14